**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE ROUGH STONE QUARRIES (CLUSTER) PROPOSED BY THIRU.S. DANAPAL IN AN EXTENT OF 1.00.0 HA AT S.F.NO: 106 (Part-I) & THIRU.A.RAJARAJA CHOLAN IN AN EXTENT OF 1.50.0 HA AT S.F.NO: 106 (Part-IV) OF PALAPATTI VILLAGE, VAZHAPPADY TALUK, SALEM DISTRICT ON 24.01.2025 AT 11.00 A.M. IN M/s. AISHWARYAM MAHAL, PERUMAL KOVIL BUS STOP, BELUR MAIN ROAD, MINNAMPALLI VILLAGE, VAZHAPPADI TALUK, SALEM DISTRICT.**

| | | |
|---|---|---|
| **1. Tmt. A. Abinaya** | : | **Revenue Divisional Officer, Salem Revenue Division** |
| **2. Er. A. Nithyalakshmi** | : | **District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem.** |

List of Project representatives, Government staff and public participated is enclosed

**District Environmental Engineer, Salem**

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem welcomed the Revenue Divisional Officer, Salem, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the M/s. S. Dhanapal and M/s. A. Rajarajacholan has obtained mining approval from the Mining and Geology Department and then applied for Environmental Clearance for their proposed project to State Level Environment Impact Assessment Authority, TamilNadu (SEIAA-TN). In this regard, SEIAA has issued Terms of Reference (TOR), with a condition that a Public Hearing has to be conducted so as to address the concerns raised by the public. Based on that, a public hearing was proposed on 24.01.2025 after getting approval from the District Collector, Salem District and as mandated public notice has been published in the newspaper namely "New Indian Express" (English) & "Dhinathanthi (Tamil)" on 18.12.2024.

The Project Proponent will make power point presentation about the said proposed project. After that the public were requested to express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and also informed to the public that the proceedings (audio and video

recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be recorded and sent to the SEIAA-TN.

On behalf of the Project Proponent, Environmental Consultant has explained about the proposed project through power point presentation.

In continuation to that, the public started to express their views, opinions, concerns, questions and the clarification from the project proponent as detailed below,

**1. Thiru.G. Suresh Kumar, Kootathupatti Village**

Hello everyone. My name is G. Suresh Kumar. I come from Kootathupatti. I have a workshop. This quarry will provide regular employment to 10 of us. So, ten families will get benefited. So, I welcome the arrival of this quarry.

**2. Thiru.Perumal, Anupur village**

Good evening. I am from Anupur Village, Ayodhyapatnam Taluk, Salem District. Do we need the quarry? Or not? The question is. We need a quarry. How is that means, if we want to build a house, we can build it only by spending 40 lakhs to 50 lakhs today. If we buy sand for it, it will cost 40 thousand to 50 thousand. Today, if we buy from this factory, it will cost 4000 or 5000 rupees. We can buy this and build. Since we belong to a very poor family, we need a quarry. Thank you.

**3. Thiru.Ramanathan, Kootathupatti Village**

My name is Ramanathan. I am from Kootathupatti village. I am doing Contractor job. If I go out and bring M sand, P sand, and gravel, the rate is high. Vehicle rent also high. we didn't get benefit by paying high vehicle rent. Since there is a stone quarry next door, we get everything at a low price and also vehicle rent will be low. That is why this project is very welcome for us.

**4. Thiru.Shankar, Palapatti Village**

My name is Shankar. I come from Palapatti village. I am working as driver because of this stone quarry only. There will be some opportunity to do this business. That is why I welcome this project.

**5. Thiru.Manikandan, Anupur village**

Hello everyone. My name is Manikandan. I have a truck business, and 4 to 5 trucks are running. I am also doing business in other state. If this quarry comes, it will

be convenient for us to do business. It will be convenient for everyone to keep the truck here and drive. That is why I welcome this quarry.

**6. Thiru.Murugan, Kootathupatti Village**

Hello everyone. My name is Murugan, I have come from Kootathupatti. It is very good to have a stone quarry, sir. That is why it is welcome to come. All the common people support this project. Hence, I too welcome this project.

**7. Thiru.Raja Periyasamy, Vilampatty Village**

Hello everyone. I am from Vilampatty Village, Vazhapadi Taluk, Salem District. My name is Raja Periyasamy. I am a rewinding mechanic. I have a lathe workshop. If a stone quarry comes, I will have a good job opportunity for welding. So, I welcome the stone quarry to come. Thank you.

**8. Thiru.M. Vijayan, Anupur Village**

On behalf of you and myself, I would like to thank the RDO and the engineer for conducting this consultation meeting. My name is M. Vijayan from Anupur Panchayat. I am a farmer. I would like to thank you again for participating in this programme. The place where this quarry set up is a rugged area. I would like to thank for choosing this place well and carrying out the work. There is no disturbance to the public, the environment and the farmers, and there is no disturbance at all. Since this mine is set up in such a place, I kindly request the RDO and DRO to cooperate and immediately grant permission for this. And it will be very helpful for us to transport these materials from nearby. If we have to transport from that place to another place, it will be very expensive for us, we need to travel around 15 kilometers. We will get benefit from this place very well. All are poor farmers from middle-class families in this place. There are no big industrialists here. We are working as wage laborers who depend on agriculture. So, the establishment of this mine here will be a great convenience and will help all the local people. The materials available here are given at low prices. One unit is not 4000 or 5000, they give us 500 to 700 at a low cost. So similarly, a friend tells us, it is convenient for us to put it in a farm cart and take it to our place to work. They give us one unit, half a unit as per the requirement. Hence, the people are safe, and the environment is very safe. It is a protected place without any disturbance. That land is a part of it without any disturbance for human life,

livestock and agriculture. Therefore, I humbly request that permission be given immediately for this quarry to take place. Thank you.

**9. Thiru.Satish, Environment Protection Secretary.**

My name is Satish. I am a petitioner to this assembly as an environment protection secretary. Greetings to everyone who has come to the stage. I respect your customs and cultural details. I agree with your opinions and legitimate problems. The government should adopt this village to solve your problems immediately and release more funds for sustainable development. New era employment opportunities should be arranged immediately. I humbly request the high-ranking government officials to provide permanent houses to the people nearby. This village should be environmentally green and I request as the environment protection secretary. I also request this owner to grow trees. Grow trees and save them. Here, Mr. Rajaraja Cholan, Mr. D.G. Dhanapal, this owner should immediately give environmental clearance without imposing any restrictions and I humbly request the high-ranking government officials. Thank you.

**10. Thiru.Ramalingam, A.N.Mangalam**

On behalf of the beneficiaries, I humbly request the government to give us permission to operate this quarry without any hindrance and to give us a good opportunity to run it in a good manner.

**11. Thiru.Venkatraman, Anuppur Village**

Hello to the Revenue Divisional Officer, the District Environmental Engineer, the police officers, the general public and government officials presented here. My name is Venkatraman, Anupur. If this project comes, it will be very beneficial for the village people, because I am saying that there are many opportunities for indirect and direct employment. There are opportunities for indirect employment for 100 people and direct employment for 50 people. In the current period, it is very difficult to extract sand and river sand, so the government itself has said to produce M-sand, so when we take it and manufacture it and do business, the infrastructure in the village will be better. There will be opportunities for people from other villages to come and build buildings and houses without much difficulty, and we will have the opportunity to get it locally without any difficulty. If I want to say something else, the Panchayat tax and professional taxes will go directly to that village. When the beneficiaries of this

company come and work, their income taxes will go to the panchayat as business tax and panchayat tax for the company. Thus, since there is tax coming to the panchayat, it will be very convenient for our panchayat to come and spend money for the people of the village. Next, if I have to say, there is a responsibility for our CSR activities, social enterprises. The expenses for that responsibility have also shown percentage, and through that, we can take that cost in a good way for the people of the village. The current situation is very difficult to do business, especially since this quarry business has come, it is very difficult. At this time, I request the government to come and give priority to this project. If this project comes, there is no objection, I welcome this project.

**Conclusion:**

The Revenue Divisional Officer, Salem has requested the public to express of their views if any.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem informed that the views, suggestions and queries of the public are recorded and the same will be sent to the State Environment Impact Assessment Authority of TamilNadu - Chennai. If there are any petitions from the public that would be enclosed along with that. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem has concluded the meeting and thanked the public gathered with which the public hearing came to an end.

The list of participants, audio and video recording, 11 No's of representation received during meeting in original with photographs of the public hearing meeting are enclosed herewith.

Attendance of the public and recordings made in CD/ Pen drive are enclosed.

| | |
|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamil Nadu Pollution Control Board**<br>**Salem** | 24/01/25<br>**Revenue Divisional Officer**<br>**Salem** |

**சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், பாலப்பட்டி கிராமம், புல.எண்.106(பகுதி–1) மற்றும் 106(பகுதி–4)ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.S. தனபால் மற்றும் திரு.A.ராஜராஜசோழன் ரப் ஸ்டோன் குவாரிகளின் உத்தேசிக்கப்பட்ட திட்டத்திற்கு 24.01.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், மின்னாம்பள்ளி கிராமம், பேளூர் மெயின் ரோடு, பெருமாள் கோவில் பஸ் நிறுத்தத்திலுள்ள தி/ள். ஐஸ்வர்யம் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி.அ.அபிநயா | : | வருவாய் கோட்டாட்சியர், சேலம். |
| 2. | திருமதி.ஆ.நித்யலட்சுமி | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம். |

கலந்துகொண்ட திட்டப்பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம்**

அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கம், திரு.S. தனபால் மற்றும் திரு.A.ராஜராஜசோழன் அவர்கள் சாதாரண கற்கள் வெட்டி எடுப்பதற்காக சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி நடைபெறவுள்ள பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தரவுள்ள நமது மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், இங்கு கூடியிருக்கும் அலுவலர்கள் திட்ட முனைவோர், ஆலோசகர், பொதுமக்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்து கொண்டு அனைவரையும் இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வரவேற்கிறேன். திரு.S. தனபால் மற்றும் திரு.A.ராஜராஜசோழன் அவர்கள் சாதாரண கற்கள் வெட்டி எடுக்க வேண்டி முதலில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையிடம் ஒரு MINING APPROVAL என்ற ஒரு அனுமதியை பெற்று பின்னர் சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு விண்ணப்பித்ததின் பேரில் அவர்களிடமிருந்து TOR (TERMS OF REFERENCE) என்ற

ஓர் வரைவறிக்கை பெறப்பட்டு அதில் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்தி கொடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டு கொண்டதற்கிணங்க இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் சம்மந்தமான அறிவிப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதலின் பேரில் 18.12.2024ம் தேதியன்று தமிழ் நாளிதழ் தினத்தந்தி மற்றும் ஆங்கில நாளிதழ் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கியின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தை குறித்து அவர்களின் ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பிறகு பொதுமக்களாகிய தாங்கள் தங்களுடைய கருத்துக்களை இம்மேடைக்கு அருகே வந்து இங்குள்ள ஒலிவாங்கியின் மூலம் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம். கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன்னர் தங்களுடைய பெயர் மற்றும் ஊரின் பெயரை தெளிவாக தெரிவித்துவிட்டு கருத்துக்களை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இந்நிகழ்வுகள் அனைத்தும் கருத்துக்கள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, எழுத்து பதிவும் செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பது தெரிவித்து கொள்ளப்படுகிறது. தற்போது அவர்களின் ஆலோசகர் திட்டத்தை பற்றி எடுத்துரைப்பார்.

**திட்ட ஆலோசகர்**

இத்திட்டம் குறித்து விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் திட்ட ஆலோசகர் அவர்கள் விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள், கேள்விகள் ஆகியவற்றிற்கு திட்ட ஆலோசகர் அவர்கள் அளித்த விளக்கங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம்**

தற்பொழுது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம். உங்க பெயர் ஊர் சொல்லிவிட்டு தொடங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**1. திரு. ஜி. சுரேஷ் குமார், கூட்டாத்துப்பட்டி கிராமம்**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் ஜி.சுரேஷ் குமார். நான் கூட்டாத்துப்பட்டிஇருந்து வருகிறேன். நான் ஒர்க் ஷாப் வைத்திருக்கிறேன். இந்த குவாரி செயல்படுறதுனால எங்களுக்கு 10 பேருக்கு ரெகுலரா வேலை கிடைக்கும். அதனால பத்து குடும்பம் நல்லா இருக்கும். அதனால குவாரி வருவதை நான் வரவேற்கிறேன்.

**2. திரு.பெருமாள், அனுப்பூர் கிராமம்**

மாலை வணக்கம். நான்அனுப்பூர் கிராமத்தில் இருந்து வருகிறேன். சேலம் மாவட்டம் அயோத்தியாபட்டணம் வட்டம் அனுப்பூர் கிராமத்தில் இருந்து வருகிறேன். நம்மளுக்கு முக்கியத்துவம் நம் கல்குவாரி தேவையா? இல்லையா? என்பதுதான். நமக்கு முக்கியத்துவம் கல்குவாரி தேவை. அது எப்படி என்றால், நாம் ஒரு வீடு கட்ட வேண்டும் அதற்கு இன்று ஒரு 40 லட்சம் 50 லட்சம் போட்டால்தான் கட்ட முடியும். அதற்கு மணல் வாங்கினால் 40 ஆயிரம் 50 ஆயிரம் ஆகும். இன்றைக்கு அதே ஒரு ஃபேக்டரிலே நாம் சென்று வாங்கினால் 4000 அல்லது 5000 ரூபாய் ஆகும். இதை வாங்கி நாம் கட்ட முடியும். நாம் மிகவும் நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் நமக்கு முக்கியத்துவம் கல்குவாரி தேவை. நன்றி.

**3. திரு.ராமநாதன், கூட்டாத்துப்பட்டி கிராமம் :**

என் பெயர் ராமநாதன். நான் கூட்டத்துப்பட்டி கிராமம். நான் கான்ட்ராக்டர் வேலை செய்து வருகிறேன். வெளியில் சென்று எம் சாண்ட், பி சான்ட், ஜல்லி எடுத்து வந்தால் ரேட் அதிகமாக இருக்கிறது. வண்டி வாடகையும் அதிகமாக இருக்கிறது. அதனாலே எங்களால் வண்டி வாடகை கொடுத்து அதிகம் கொடுத்து வாங்கி ஒன்றும் 10 பைசாவுக்கு பிரயோஜனம் கிடையாது.. பக்கத்திலே கல் குவாரி

இருப்பதினாலே எங்களுக்கு எல்லாமே குறைந்த விலையில் கிடைக்கிறது. வண்டி வாடகை கம்மியாக கிடைக்கிறது. அதனாலே இந்த திட்டம் எங்களுக்கு மிகவும் வரவேற்கதக்கது. வணக்கம்.

**4. திரு.சங்கர், பாலப்பட்டி கிராமம்**

என் பெயர் சங்கர். நான் பாலப்பட்டி கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த கல் குவாரியினாலே நான் டிரைவர் தொழில் செய்கிறேன். இந்த தொழில் செய்வதற்கு கொஞ்சம் வாய்ப்பாக இருக்கும். அதனாலே நான் வரவேற்கிறேன்.

**5. திரு.மணிகண்டன், அனுப்பூர் கிராமம்**

அனைவருக்கும் வணக்கங்க. என் பெயர் மணிகண்டன். நான் லாரி தொழில் வைத்திருக்கிறேன். என்னிடம் ஒரு 4 ,5 லாரி ஓடிக் கொண்டிருக்கிறது. நான் வெளி மாநிலத்தில் தொழில் பண்ணிக்கொண்டிருக்கிறேங்க. இந்த குவாரி வந்தால் தொழில் பண்ணுவதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும்ங்க.. லாரி இங்கே வைத்து ஓட்டுவதற்கு எல்லாத்துக்கும் வசதியாக இருக்கும்ங்க. அதனாலே இந்த தொழில் வருவதற்கு நான் வரவேற்கிறேங்க.

**6. திரு.முருகன், கூட்டாத்துப்பட்டி கிராமம்**

அனைவருக்கும் வணக்கம். என்பெயர் முருகன்ங்க, கூட்டாத்துப்பட்டி இருந்து வந்திருக்கிறேன். கல் குவாரி இருப்பது ரொம்ப நல்லதாக இருக்கிறது சார். அதனாலே வந்து இது வரவேற்கத்தக்கது.பொது மக்கள் எல்லாருமே ஆதரிக்கிறார்கள், ஆகவே நானும் வரவேற்கத்தான் செய்யவேண்டும் நல்லது தான் இருக்கிறது. முருகன் த/பெ.கணேசன் நன்றி .

**7. திரு.ராஜா பெரியசாமி, விளாம்பட்டி கிராமம்**

எல்லோருக்கும் வணக்கம். நான் சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் விளாம்பட்டி கிராமத்தில் இருக்கிறேன். என்பெயர் ராஜா பெரியசாமி நான் ஒரு rewinding மெக்கானிக்.லேத் பட்டறைவைத்திருக்கிறேன். கல் குவாரி வந்தால்

வெல்டிங் செய்வதற்கு எனக்கு வேலை வாய்ப்பு நன்றாக இருக்கும். அதனால் கல் குவாரிவருவதை வரவேற்கிறேன்.நன்றி.

**8. திரு.எம் விஜயன், அனுப்பூர் கிராமம்**

இந்த கருத்துக் கேட்பு விழாவிற்கு கலந்து கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன். RDO அவர்களுக்கும், பொறியாளர் அவர்களுக்கும்,உங்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனது பெயர் எம்.விஜயன் அனுப்பூர் ஊராட்சியை சேர்ந்தவன். நான் ஒரு விவசாயி. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றமைக்கு மீண்டும் ஒரு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கல்குவாரி அமைக்கப்பட்டுள்ள இடம் ஒருகரடு பகுதியான இடம். இந்த இடம் ஒரு நல்ல தேர்வு செய்து பணி நடைபெற்றதற்கு ஒரு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.பொதுமக்கள் அனைவருக்கும் எந்த விதமான இடையூறும் இன்றி சுற்றுச்சூழல் மற்றும் இதனால் இடையூறு விவசாயிகளுக்கு தொந்தரவு அப்படிங்கிற மாதிரி எந்த ஒரு இடையூறும் சிறிதளவும் கிடையாது. அந்த மாதிரி ஒரு இடத்தில் இந்த சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளதற்கு அதற்கு உதவியாக இருந்து ஆர்டிஓ மற்றும் டி ஆர் ஓ அவர்கள் ஒத்துழைப்பு கொடுத்து உடனடியாக இதற்கு அனுமதி வழங்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மற்றும் எங்களுக்கு தேவையான இந்த பொருட்கள் அனைத்தும் மிக அருகில் மிக அருகாமையில் இருந்து நாங்கள் எடுத்துச் செல்ல எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த இடத்திலிருந்து மாற்று இடத்திற்கு நாங்கள் எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் அதிக செலவு எங்களுக்கு,15 கிலோமீட்டர் தூரம் சுற்றி வரத் தேவையாக இருக்கிறது. மிக அருமையாக இந்த இடத்தில் நாங்கள் பயன் பெற்றுக் கொள்வோம். எல்லாமே அங்கு இருப்பவர்கள் ஏழை விவசாயிகள் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தான். அங்கே ஒன்றும் பெரிய தொழில் அதிபர்கள் பெரிய அளவில் யாரும் கிடையாது. ஒரு விவசாயத்தை நம்பியும் ஒரு கூலித் தொழிலாளர்களாக நாங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறோம். ஆக இந்த சுரங்கம் அமைப்பதினால் அங்கே இருப்பவர்கள் அனைவருக்கும் மிகுந்த ஒரு வசதியாகவும் ஒரு உதவியாகவும் இருக்கும். அங்கு கிடைக்கின்ற பொருட்கள் குறைந்த விலையில்

கொடுக்கிறார்கள். அதே போல ஒரு நண்பர் சொன்னார் ஒரு டிராக்டரிலே விவசாய வண்டியிலே வைத்து நாங்கள் எடுத்துச் சென்று எங்களுடைய இடத்திற்கு பணி செய்ய வசதியாக இருக்கிறது. ஒரு யூனிட், அரை யூனிட் தேவைக்கேற்ப எங்களுக்கு அவர்கள் கொடுப்பது உதவியாக இருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு பாதுகாப்பாக கிடைக்கிறது. சுற்றுச்சூழல் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. எந்த ஒரு இடையூறும் இல்லாமல் பாதுகாக்கப்பட்ட ஒரு இடமாக இருக்கிறது. மனிதன் வாழ்வதற்கும் ஒரு கால்நடைக்கும் ஒரு விவசாயத்திற்கும் எதுக்குமே இடையூறு இல்லாத ஒரு பகுதியாக அந்த நிலம் இருக்கிறது. ஆகவே இந்த குவாரி நடக்க உடனடியாக அனுமதி அம்மா வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**9. திரு.சதீஷ், சுற்றுச்சூழல் காப்பாற்று செயலாளர்**

என் பெயர் சதீஷ். நான் ஒரு சூழியல் காப்பாற்று செயலாளராக மனுதாரராக இந்த சபைக்கு வணக்கம். மேடைக்கு வந்த அனைவருக்கும் வணக்கம். உங்கள் ஆச்சார விவரங்களை கலாச்சாரம் சார்ந்த எங்களை காப்பாற்றி கொண்டு உங்கள் மனோ பாவங்களை மதிக்கிறேன். உங்கள் அபிப்பிராயங்களுடன் நியாயமான பிரச்சனைகளை ஒப்புக் கொண்டு உங்களுடன் ஒரு மனதாக ஒப்பு கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த ஊரினை தத்து எடுத்துக் கொண்டு நிலையான வளர்ச்சி உருவாவதற்கு அதிகமான நிதியை உடனே வெளியிட வேண்டும். புது யுகம் வேலை வாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அருகில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊர் சூழியல் மற்றும் பசுமையுடன் நிலையாக இருக்க வேண்டும் என்றும் சூழியல் காப்பாற்று செயலாளராக கேட்டுக் கொள்கிறேன். இந்த உரிமையாளர் அவர்களுக்கும் மரங்கள் வளர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மரங்கள் வளருங்கள், அவற்றை காப்பாற்றுங்கள் இங்கு திரு.A.ராஜராஜசோழன், திரு.S.தனபால் இந்த உரிமையாளர் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்காமல் சூழியல் அனுமதியை உடனடியாக

கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க உயர்நிலை அதிகாரிகள் அவர்களுக்கும் மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

**10. திரு.ராமலிங்கம், ஏ.என். மங்கலம்**

இங்க அமர்ந்திருக்கும் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கம் இந்த குவாரி அமைவதற்காக எங்களுடைய பொதுமக்கள் சார்பிலும் எங்களுடைய பயனாளிகள் சார்பிலும் இந்த குவாரி எங்களுக்கு வந்து எந்த ஒரு தங்கு தடையும் இன்றி அனுமதி கொடுக்குமாறு இந்த அரசாங்கம் எங்களுக்கு இதை நல்ல முறையில் நடத்திக் கொடுக்க வேண்டுமாறு அரசாங்க அதிகாரிகளிடம்நல்ல ஒருவாய்ப்பை எங்களுக்கு கொடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**11. திரு.வெங்கட்ராமன், அனுப்பூர் கிராமம்**

வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், வந்திருக்கும் பொது மக்கள், அரசு அதிகாரிகளுக்கும் வணக்கம். என் பெயர் வெங்கட்ராமன், அனுப்பூர். இந்த திட்டம் வரும் பட்சத்தில் வில்லேஜ் ஊர் பொதுமக்களுக்கு ரொம்ப பயனுள்ளதாக இருக்கும், ஏன் சொல்கிறேன் என்றால், மறைமுகமாக, நேரடியாக வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. மறைமுகமாக ஒரு 100 பேருக்கும் நேர்முகமாக ஒரு 50 பேருக்கும் வாய்ப்புகள் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. இப்ப இருக்கிற காலகட்டத்தில் மணல், ஆற்று மணல் எடுப்பதற்கு ரொம்ப சிரமமாக இருக்கிறது அதனால் அரசாங்கமே சொல்லியிருக்கிறது எம்–சான்டு உற்பத்தி பண்ணுங்கள் என்று, அதனால நாம் அதை எடுத்து மேனுஃபாக்சரிங் பண்ணி நாம் தொழில் செய்யும் போதுஊர்ல இன்ஃப்ராஸ்ட்ரக்சர் உள்கட்டமைப்புகள் வந்து சிறப்பாக இருக்கும். ரோடு போடவும் மற்ற ஊர் மக்கள் வந்து பில்டிங், வீடுகள் கட்டறதுக்கு ரொம்ப சிரமம் இல்லாமல் தூரமாக எம் சான்டு எடுக்க வாய்ப்பு இல்லாமல் உள்ளூரிலேயே கிடைக்கிற அளவிற்கு நமக்கு சிரமம் இல்லாமல் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கும்.

இன்னொன்று சொல்ல வேண்டுமென்றால் பஞ்சாயத்து வரி ப்ரொபஷனல் டாக்ஸ் அந்த கிராமத்திற்கு நேரடியாக போய் சேரும். இந்த நிறுவனம் உள்ள பயனாளிகள் வந்து வேலை செய்யும்போது அவர்களுக்கு இருக்கிற வருமான வரிகள் தொழில் வரியாகவும் நிறுவனத்திற்கான பஞ்சாயத்து வரியாகவும் பஞ்சாயத்திற்கு போய் சேரும். இதனால் பஞ்சாயத்திற்கு வந்து வரி இருக்கிறதுனால நல்லபடியா நம்ம பஞ்சாயத்துக்கு வந்து செலவுகள் ஊர் மக்களுக்காக செலவுகள் செய்ததற்கு ஒரு ரொம்ப ஏதுவாக இருக்கும். அடுத்த சொல்ல வேண்டும் என்றால் நம்ம சிஎஸ்ஆர்ஆக்டிவிட்டீஸ், சமூக நிறுவனத்திற்கு வந்து ஒரு பொறுப்பு இருக்கிறது. அந்த பொறுப்பிற்கான செலவினங்களும் நம்ம பர்சன்டேஜ் காட்டி இருக்கிறார்கள் அது வழியாக ஊர் பொதுமக்களுக்கும் ஊருக்கும் நல்லவிதமான அந்த செலவு எடுத்து நம்ம செய்யலாம். இப்ப இருக்கிற காலகட்டத்தில் தொழில் செய்வதற்கு ரொம்ப கடினமான சூழ்நிலையாக இருக்கிறது, முக்கியமா இந்த குவாரிய தொழில் வந்துட்டு ரொம்ப கடினமா இருக்கு. இது வந்து அரசாங்கம் வந்துட்டு முன்னுரிமை எடுத்து கொடுக்க வேண்டுமென்று இந்த டைமில் நான் கேட்டுக்கொள்கிறேன் இந்த திட்டம் வரும் பட்சத்தில் எந்தவிதமான ஆட்சேபனையும்எதுவும் இல்லை இந்த திட்டத்தை வந்து வரவேற்கிறேன் நன்றி.

**முடிவுரை :.**

மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்களிடம் வேறு ஏதும் கருத்துக்கள் உள்ளதா என்று கேட்டார். இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொது மக்களிடம் தாங்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படும். இந்நிகழ்ச்சியை அமைதியாக நடத்த ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். மனுக்கள் ஏதேனும் இருப்பின் கொடுக்கும் பட்சத்தில் அதையும் இத்துடன் இணைத்து அனுப்பப்படும் என்று கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

மேலும் சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம், பாலப்பட்டி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.S. தனபால் மற்றும் திரு.A.ராஜராஜசோழன் ரப் ஸ்டோன்

ஆகிய சாதாரண கல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக 11 மனுக்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப்பதிவேடு மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த ஒலி / ஒளிப்பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய குறும்பதிவி (Pendrive) ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

24/01/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**சேலம்**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**சேலம்**